முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.20.01.2026

O.S No. 168/2024

வா.சா.2 கீதா

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். நான் 10 ம்வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதி எனது சகோதரியிடம் இருந்து கடன் வாங்கிய போது என்ன தேவை என்று சொன்னாரா என்றால் தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் ஜெயாஆவார். அவர் எனக்குஅம்மாவழி சொந்தம் ஆவார். எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனது சகோதரி என்னிடம் கேட்டாரா என்றால் ஆமாம் கேட்டார். பிரதிவாதி என்ன தேவைக்காக கடன் வாங்கினார் என்பது எனக்கும் எனது சகோதரிக்கும் தெரியாது என்றால் சரி. 1 மாதத்திற்கு எவ்வளவு வட்டி என்றால் 1 பைசா வட்டி ஆகும். எவ்வளவு நாள் வட்டி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது நான் பார்க்கவில்லை. என்னிடம் பல முறை பிரதி கடன் வாங்கியதாக எனது நிருபண வாக்குமூலத்தில் 3 பத்தியில் செல்லியிருப்பதில் எத்தனை முறை, எவ்வளவு தொகை, எந்தெந்த தேதியில், யார் யார் சாட்சி முன்னிலையில் கடன் வாங்கி எப்போது அதை திருப்பி செலுத்தினார் என்றால் 2024 ல் ரூ 20 ஆயிரம் என்னிடம் பிரதி கேட்டார். நான் L and T finance company ல் லோன் எடுத்து கொடுத்தேன். பிரதியின் தம்பியை எனக்கு திருமணம் செய்து கொடுத்து என்னை பணத்திற்காக என்னை வைத்திருந்தார்கள். அதனால் 1 ½ மாதத்தில் திரும்பி வந்துவிட்டேன். அந்த கடனை நானே திருப்பி செலுத்தினேன்.

மேற்படி அனைத்து விவரங்களையும் எனது நிருபண வாக்குமூலத்தில்

சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு என்னை ஏமாற்றிய நபருக்கு வாதி கடன் கொடுக்கும் போது கடன் கொடுக்க நான் பரிந்துரை செய்தேன் என்றால் பிரதி மறுமணம் செய்த அந்த ஆண் நபர் வசதி வாய்ப்பாக இருந்ததால் அவரிடம் இருந்து கடனை திரும்ப பெறலாம் என்ற நம்பிக்கையில் கொடுத்தோம். நான் பிரதிக்கு கடன் கொடுத்தபோது என்ன பிடிமானம் பெற்றுக்கொண்டேன் என்றால் எதுவும் வாங்கவில்லை நம்பிக்கையின் முறையில் கடன் கொடுத்தேன்.

வாதி எனது சகோதரி என்பதால் பொய் சாட்சியம் அளித்து பிரதியிடம் இருந்து பணத்தை வாங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.